பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை 04.08.2024 கதிர் 270

# தொழில்வாய்ப்பு கோரிக்கைகளே யாழ். இளையோரால் முன்வைப்பு

## தெளிவுபடுத்துகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கடந்தசிலநாட்களாகயாழ்ப்பாணத்தில்தான்மேற்கொண்டபயணங்களில் இளைஞர்கள் பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பிலான கோரிக்கைகளையே முன்வைத்தனர் என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டியது அவசியமென்பதை தான் ஏற்றுக்கொள்கிறார்என்றும்தெரிவித்த ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க,இன,மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இலங்கையர் என்றவகையில்அனைவரும்ஒன்றுபட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுயாழ்ப்பாணத்திலுள்ளஉதயன் பத்திரிக்கைஅலுவலகத்திற்குச்சென்ற போது அங்கு இதனைத் தெரிவித்தார்.

அங்கு பத்திரிகையாளர்களுடன் பேசிய அவர், நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கவேண்டும் என்பதே முதல் பிரச்சினையாக இருந்தது எனவும், கடந்த ஜூன் ☞2

# இது ரகசியம் அல்ல!

நடிகர் வடிவேலுவின் பாணியில் சொன்னால் "நம் ராஜதந்திரங்கள் அனைத்தும் வீணாகிவிட்டனவே" என்பதுதான் ஜனாதிபதி ரணிலின் தற்போதைய நிலை. தன்னை ஒரு பொது வேட்பாளராக நிறுத்தி, மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் எடுத்த பகிரதப்பிரயத்தனங்கள்அனைத்தும் வீணாகிவிட்டன.

முள்ளில் விழுந்த சேலையைத் தூக்கிப் போடுவதைப் போன்று ராஜபக்சக்கள் தமக்குச் சேதாரமில்லாமல் ரணிலைத் தூக்கிப் போட்டுவிட்டார்கள். மொட்டுக் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் தாம் அமைதியாக இருந்துகொண்டு மற்றவர்களைப் பேசவிட்டதுமட்டுமல்லாமல் வாக்கெடுப்புவேறு நடத்தி தமது கட்சிக்குள்வெறும்11பேர்மட்டும்தான் ரணிலுக்குஆதரவாகஇருக்கிறார்கள் என்று காட்டி வென்றுவிட்டார்கள்.

மொட்டுக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டம் நேற்றுத் தொடங்கியபோது அதில் 79 பேர் கலந்துகொண்டிருந்தனர். மொத்தம் 82 பேர் அதன் உறுப்பினர்கள். ☞2

# சு.கவின் ஓர் அணி சஜித்துக்கு ஆதரவு

சுதந்திரக் கட்சியின் ஓர் அணியினர் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர். கட்சியின் பொதுச் செயலாளர் என்று உரிமை கோரி வருகின்றவரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இந்த அறிவிப்பை விடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதரப்பில்ஒருஅணி, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் பிறிதொரு அணி, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தரப்பில் பிறிதொரு அணி என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மூன்றாக பிளவடைந்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தயாசிறி ஜயசேகர, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் செயற்குழு மற்றும்நிறைவேற்றுக்குழு கூட்டத்தை நடத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு ☞2

# புதிய அம்சங்களோடு ஒக். முதல் கடவுச்சீட்டு

புதியஅம்சங்களைக் கொண்ட கடவுச்சீட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வழங்கப் படுமென, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இதற்கமைய சாதாரண, ☞2

# யானை தாக்கி ஒருவர் இறப்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் யானை தாக்கியதில்ஒருவர்உயிரிழந்தார் என்று நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## சைவ, கிறிஸ்தவ, பௌத்த

# மதத் தலைவர்களுடன் ரணில் யாழ்ப்பாணத்தில் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று மதத் தலைவர்களை அவர்களது இடங்களுக்கே சென்று நேரில் சந்தித்துப் பேசினார்.

முதலில்நல்லைஆதீனத்திற்குச் சென்ற அவர், அங்கு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்து மாமன்றஉபதலைவர்ஆறு திருமுருகன்உள்ளிட்டவர்கள் உடனடிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்தும் பலாலிமுகாம்பகுதியில்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்துள்ளசைவமடங்கள் மற்றும் வழிபாட்டிடங்கள் விடுவிக்கப்படவேண்டியதன் அவசியம்குறித்தும்அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினார்.

அதனையடுத்து, யாழ்.ஆயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, யாழ்.ஆயர் அருட்தந்தைஜஸ்டின்ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். ☞2

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்பும் கட்டாயத்திற்கு ஆளாவர்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

மத்திய கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பும்கட்டாயநிலைக்கு தள்ளப்படுவார்களென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்மனுஷநாணயக்கார தெரிவித்தார்.

ஈரானில் ஹமாஸ் அமைப்பினது அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலைசெய்யப்பட்ட பின்னர்மத்தியகிழக்கில் அதிகரித்துவரும்போர்ச் சூழ்நிலை தொடர்பாக நேற்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புஅமைச்சில்செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் பணிப்புரையின்பிரகாரம் இஸ்ரேல், லெபனான், ஜோர்டான்மற்றும்எகிப்து ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 5 மில்லியன் டொலர் ஒதுக்கப் பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும்போர்ச்சூழ்நிலை காரணமாக நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டு நிலைஏற்படாமல்இருக்க பொறுப்புள்ளஅரசாங்கம் என்ற வகையில் தேவையானஅனைத்து ஏற்பாடுகளையும்செய்து வருகிறோமெனவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்

இஸ்ரேலில் மாத்திரம் 12,000க்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்களும், ஜோர்டானில் 15,000, லெபனானில் 7,500, எகிப்தில் கிட்டத்தட்ட 500 பேர் ☞2

# தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களைபொறுப்பேற்கும் நடவடிக்கைநாளையுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களைதேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூலவாக்களிப்புக்கான விண்ணப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும்காலம்நீடிக்கப் படுமென பரவும் தகவல் பொய்யானதெனவும் தேர்தல்கள்ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, உரிய வாக்களிப்பு நிலையத்தைத்தவிர்ந்த வேறு இடங்களில் வாக்களிக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவு படுத்தியுள்ளது.

உரிய வாக்களிப்பு நிலையத்தில்வாக்களிக்க முடியாது என்ற நியாயமான அச்சம் ஏற்படும் போது வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்குமாறு ☞2

# ஓய்வூதியர்களுக்கு ரூ. 3000 செப்டெம்பர் முதல் அதிகரிப்பு

அரச சேவையில் அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும்தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக 3,000 ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,நிதிஇராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் இந்த மேலதிக கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அரச சேவையில் ஓய்வூதியக்காரர்களுக்கு மொத்தமாக 5,500 ரூபா இடைக்கால கொடுப்பனவாக வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர் சம்பளத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பரிசீலித்து தொடர்புடைய எதிர்கால திருத்தங்களை செய்வதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி யூ.ஆர்.செனவிரத்ன தலைமையில் நிபுணர் குழு அண்மையில் நியமிக்கப்பட்டதாகவும் மீளாய்வின் அடிப்படையில்எதிர்வரும்2025ஆம் ஆண்டு முதல் ☞2

# ஹயஸ் மோதியதில் பெண் உயிரிழப்பு

## சுன்னாகத்தில் சம்பவம்

சுன்னாகம்பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை ஹயஸ் ரக வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்துபயணித்தபெண் படுகாயமடைந்தார். அவர் வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்ட போதும் அங்கு உயிரிழந்தார்.

சுங்கானைபகுதியைச் சேர்ந்த ஆனந்தன் சிவானந்தக்கௌரிஎன்ற 51வயதான பெண்ணே உயிரிழந்தார். விபத்து தொடர்பில்ஹயஸ்வாகன சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுவருகிறார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வந்திருந்தவர்கள் ஆளும் தரப்பில் அமைச்சர்களாக இருப்பவர்கள் உள்ளிட்ட 11 பேரைத் தவிர வேறு எவரும் ரணிலுக்கு ஆதரவாக இருக்கவில்லை.

அதுமட்டுமல்ல ரணிலுக்குத் தொடர்ந்தும் ஆப்படிப்பதி-லும் மொட்டுக் கவனமாக இருக்கிறது. அதற்காக ஒரு அந்தக் கட்சி ஒரு தீர்மானத்தையும்எடுத்திருக்கின்றது. கட்சியின்முடிவுக்குமாறாகஅதாவது கட்சிநிறுத்தப்போகும்வேட்பாளரை ஆதரிக்காது வேறு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாகப் பணி செய்பவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே அந்தத் தீர்மானம். அதனை எதிர்த்து வெறும் 6 பேர் மட்டுமே வாக்களித்திருக்கிறார்கள்.

நேற்றைய கூட்டத்தில்மொட்டுக் கட்சியின்ஜனாதிபதிவேட்பாளர்யார் என்பது தீர்மானிக்கப்படவில்லை. அதுஅனேகமாகஇந்தவாரத்திற்குள் அறிவிக்கப்படும்என்றுஎதிர்பார்க்கப் படுகின்றது.

கட்சி நாமல் ராஜபக்சவின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதையும் மொட்டுத் தலைவர்கள் அடுத்த தலைமுறைப் பயணத்திற்குத் தம்மைத் தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள் என்பதையும் பறைசாற்றியதாக அதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். நாமலும் கட்சியின் செயலாளர் காரியவாசமும் ஒரே பக்கம் நிற்கிறார்கள்.

ரணிலை எதிர்த்து அரசியல் செய்தால்தான் சரிவிலிருந்து மீளமுடியும் என்று நாமல் தரப்பு நம்புகின்றது. இனவாதத்தைக் கையிலெடுப்பது குறித்து இந்தத் தரப்பு இன்னும் சிந்திக்கவில்லை என்றாலும் தேசப்பற்று என்பதைக் முன்னிறுத்தி ரணிலின் காலை வாருவதில் இந்தத் தரப்புக் கவனமாக இருக்கின்றது. தனியார் மயமாக்கல், பொருளாதாரத் தாராளமயமாக்கல் என்பவற்றை இந்தத் தரப்பு தொடர்ந்து எதிர்க்கும். அது ரணிலுக்குத் தலையிடிதான்.

முதற்கோணல் முற்றும் கோணல் என்பதைப் போன்று ரணிலின் ''தெரிந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி'' கனவுப் பயணத்தில் முதலிலேயே அவர் பெரும் அடி வாங்க வேண்டியவராகியுள்ளார். அதிலிருந்து மீண்டு வெற்றியை நோக்கி அவரால் முன்னேற முடியுமா என்பது அடுத்த ஒன்றரை மாதங்களில் தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தொழில்வாய்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்தில் அந்தப் பிரச்சினையை நிறைவுக்குக்கொண்டுவர முடிந்திருந்தமையினால் தற்போது ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது குறித்து சிந்தித்து வருகிறார் என்றும் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில்தான்மேற்கொண்ட பயணங்களில் இளைஞர்கள் பெரும்பாலும்தொழில்வாய்ப்புக்கள் தொடர்பிலானகோரிக்கைகளையே முன்வைத்தனர். அதனால் வடக்கிலும், தெற்கிலும் உள்ள இளையோரின் எதிர்பார்ப்புக்களில் வேறுபாடுகள் தெரியவில்லை என்றும் கூறினார்.

மாகாண சபைகளை வலுவூட்டி அந்தந்த மாகாணங்களின் அபிவிருத்திக்கான பரந்தளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தனது எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மாகாணங்களுக்கும் மத்திய ஆளும்தரப்பு உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

## ஓய்வூதியர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தப்பட்ட சம்பள கட்டமைப்பை அமுல்படுத்தும்வரை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு இந்த இடைக்கால கொடுப்பனவு வழங்கவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச சேவை ஓய்வூதியக் காரர்களில் தற்போது சுமார் 7 இலட்சம் பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் எனவும் இதற்கமைய 2024ஆம் ஆண்டில் இந்த இடைக்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு 8.4 பில்லியன் ரூபாயை மேலதிக செலவீனத்தை சுமக்க நேரிடுமென்றும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடனை நிர்வகிப்பதில் சவால்கள் இருந்த போதிலும், ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் தற்போது எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்கம் வழங்கும் விரைவான குறுகியகால தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவது குறித்து தீர்மானம் எடுத்துள்ளோம். இதற்கமைய ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கவும், கூட்டணியில் இணைந்துக் கொள்ளவும் தீர்மானித்துள்ளோம் என்றார்.

ஆளும்தரப்புடன் எவரும் இணையக்கூடாது என சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு 2023.11.11 ஏகமனதாகத் தீர்மானித்தது. இந்த தீர்மானத்துக்கு எதிராக நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தரப்பினர் அமைச்சு பதவிகளுக்காக ஆளும்தரப்போடு இணைந்துகொண்டார்கள். அரச அதிகாரத்துடன் சட்டவிரோதமான முறையில் சுதந்திர கட்சியின் தலைமைக் காரியாலயத்தை ஆக்கிரமித்துள்ளார்கள்.

நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திர கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளமை செல்லுபடியற்றது. கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை நடத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏகமனதாக ஆதரவுவழங்கதீர்மானித்துள்ளதாக அவர் அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது என்றார்

## தபால் மூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோர முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இதுதொடர்பில் பரவும் பொய்யான தகவல்களை நிராகரிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## மதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகலில் யாழ். நாக விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி முதலில் புத்த ஸ்தூபிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, யாழ்ப்பாணம்ஸ்ரீநாகவிகாரையின் விகாராதிபதி மீகஹஜந்துரே சிறிவிமலநாயக்கதேரரைச்சந்தித்து நலன் விசாரித்தார்.

'பௌத்த இந்து சமய மன்றம்' சார்பில் அதன் தலைவர் கலாநிதி எம். மோகனையும் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

முஸ்லிம் மதத் தலைவர்கள் எவரையும்அவர்சந்தித்துப்பேசினார் என்று தகவல்கள் இல்லை.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் இந்தச் சந்திப்புக்களில் கலந்துகொண்டனர்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திரகடவுச்சீட்டுகள் 3வெவ்வேறு நிறங்களுடன்வழங்கப்படுமென்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் முதலாவது மின்னணு கடவுச்சீட்டு வழங்குவதற்கு தயாராகும் வகையில் அடுத்த இரண்டு மாதங்களுக்கு கடவுச்சீட்டுகளை வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் நடுப்பகுதியில் மின்னணு கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த முன்னர் பல தொழில்நுட்ப மற்றும் சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

நாள் தோறும் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 1,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. எனினும் அவசர பயண தேவைகளை கொண்டவர்களுக்கு குடிவரவு, குடியகல்வுதிணைக்களம் கடவுச்சீட்டுகளை வழங்கி வருவதாகவும், அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

## யானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா வடக்கு கற்குளம் பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் இரவு 10.30 மணியளவில் மகனைத் தேடி கிராம வீதியூடாகச் சென்ற போது வீதியில் நின்ற யானை அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் பட்டறை பிரிந்தகுளம் பகுதியை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான இராசையா நாகராசா (வயது 58). இது தொடர்பான மேலதிக விசாரணைகளைநெடுங்கேணிபாலிசார் மேற்காண்டு வருகின்றனர்.

(100)

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் மோதல் வலயத்தில் பெருமளவிலான இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர்.

தேவை ஏற்படும் பட்சத்தில் தொழிலாளர்களை கடல் அல்லது விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்துவருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறும் ஜனாதிபதிபணிப்புரைவிடுத்துள்ளார்.

இவ்வாறே சவூதி அரேபியா, குவைத் மற்றும் பிற நாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களும் இந்த நிலைமையால் வேலைவாய்ப்பை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். தேவைப்படும்போது அவர்களை தாய் நாட்டுக்கு அழைத்து வரவும், அதுவரை பாதுகாப்பான தங்குமிட வசதிகளைவழங்கவும்அரசுகவனம் செலுத்தி வருகிறது எனவே நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து சமூகமயமாக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அமைச்சர் தெரிவித்தார்.

மத்தய கிழக்கில் உள்ள இலங்கை யர்கள் ஆபத்தான வகையில் எல்லைகளை கடக்காமல் பாதுகாப்பான முறையில் செயற்படுவது அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# உண்மையான பொது வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

## வடக்கு – கிழக்கு சார்ந்த பொது வேட்பாளர் தேவையில்லை என்கிறார் எமில்காந்தன்

நாட்டின் உண்மையான பொது வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான். வடக்கு - கிழக்கு சார்ந்த பொது வேட்பாளர் தமிழ் மக்களை தோல்விப் பாதையில் கொண்டு செல்லும் என ஐக்கிய மக்கள் கட்சி கூட்டணியின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.எமில்காந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அமைச்சர் டிலான் அலஸ் அவர்களுடைய ஐக்கிய மக்கள் கட்சியின் ஊடாக பல சிதறிய கட்சிகளையும் சேர்ந்து வன்னி, நுவரெலியா உள்ளிட்ட பல மாவட்டங்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தோம்.

தற்போது தமிழ் மக்களுடைய அரசியல் பயணம் பின்னோக்கிய நிலையில் உள்ளது. பாரம்பரிய அரசியல் கட்சிகளை கொண்ட தமிழ் மக்கள் தற்போது எந்தக் கட்சி, யாரை ஆதரிப்பது என்ற நிலையில் உள்ளனர்.

எங்களுடைய மக்களுக்கு காத்திரமான ஓர் அரசியல் கட்டமைப்பை உருவாக்கி கொடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவும் ஒரு பொது வேட்பாளராக களம் இறங்குகிறார். இந்த நாட்டுக்கு அவர் ஆற்றிய



சேவை காரணமாக அவர் பொது வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் அவர் பெரியதொரு பொறுப்பை எடுத்து இந்த நாட்டை மீட்டுள்ளார். அந்த அடிப்படையில் என் சார்ந்த கட்சிகளுடைய ஆதரவும், ஐக்கிய மக்கள் கட்சியின் ஆதரவும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தான்.

ரணில் விக்கிரமசிங்கவை தான் ஆதரிப்போம். நாட்டின் பொருளாதாரம், கட்டமைப்பு, சவாலான நேரத்தில் வழிநடத்தியவர். அரசியலில் நீண்ட காலம் அனுபவம் கொண்ட ஒருவராக உள்ளார். இதனால் தற்போதைய ஜனாதிபதியை தான் நாம் ஆதரிக்க வேண்டும். அவர் தான் இந்த நாட்டின் உண்மையான பொது வேட்பாளர்.

இந்த நேரத்தில் தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலை எப்படி பார்க்க வேண்டும் என்ற செயற்திட்டங்களை செய்ய தீர்மானித்துள்ளோம். வடக்கு - கிழக்கில் தமிழ் பொது வேட்பாளர் என்று ஒரு விடயத்தை பேசு பொருளாக்கி அதற்கு ஒரு வேட்பாளரை தேடிப் கொண்டிக்கிறார்கள். தமிழ் தேசியம் என்ற அடிப்படையில் பொது வேட்பாளரை நிறுத்துவார்களாக இருந்தால் அது தமிழ் மக்களை தோல்விப் பாதையில் கொண்டு செல்லும். அவர்கள் பிழையாக மக்களை வழிநடத்துகிறார்கள் என்று தான் அர்த்தம்.

வடக்கு - கிழக்கை மட்டும் வைத்து வேட்பாளரை நிறுத்துவார்களாக இருந்தால் அது வெல்லப்போதில்லை. அதை தெரிந்திருந்தும் அரசியல் கட்சிகள் தமது கடமையை விட்டு தவறாக வழி நடத்துகிறாத்கள். அரசியல் கட்சிகள் மக்களை சரியான வழியில் வழி நடத்த வேண்டும்.

காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பது தொடர்ந்து பேசப்பட்டு கொண்டு இருக்கிறது. தொடர்ந்தும் அதே விடயத்தை பேசிக் கொண்டிருக்க முடியாது. அதனை பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசியல் கட்சிகளின் கடமை. நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் உண்டு. அது பற்றி பேசுவதை விடுத்து தற்போதைய நாட்டு மக்களும், எதிர்கால சந்ததியும் சிறப்பாக வாழ வேண்டும் என்றால் ஒரே தெரிவு தற்போதைய ஜனாதிபதி ரணில் தான் எனத் தெரிவித்தார்.(05)

# ஞானசார தேரர் மீது முஸ்லிம்கள் மீண்டும் கடும் குற்றச்சாட்டுக்கள்

## பள்ளிவாசல் நிர்வாகத்தை குழப்ப முயற்சியாம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தை குழப்பும் முயற்சியில் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர் திரைமறைவில் செயற்பட்டு வருகின்றனர் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ். எம். ஏ அஸீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பெயரால் புதிய நிருவாக சபை சட்டவிரோதமாக செயற்பட முயற்சி செய்கின்றது. இன்று வரை நாங்கள் தான் இந்த கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் மற்றும் நம்பிக்கையாளர் சபையினர். புதிய நிருவாக சபை பதவியேற்றலின் அடாத்தாக எம்மை அச்சுறுத்தவருகின்றார்கள். அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு முறைப்பாடு செய்துள்ளேன். எமது நிர்வாகம் மீது குற்றச்சாட்டுக்கள் ஊழல் காரணமாக இரு பள்ளிவாசல்களுக்கும் என புதிதாக 22 பேர் கொண்ட நம்பிக்கையாளர் நியமனப் பத்திரத்தை 2024.07.24 அன்று முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (வக்கு பகுதி) வழங்கி இருப்பதனை நாம் இதுவரை ஏற்கவில்லை மக்களும் அவ்வாறான ஒரு கருத்தில் தான் உள்ளனர். இங்கு ஞானசார தேரர் மற்றும் இதர தரப்பினர் எமது நிர்வாகத்தை குழப்புவதற்கு முயல்கின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இவ்வாறான குழப்ப நிலை ஏற்படுவது வீண் சந்தேகத்தை எம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரத்தில் மிகவும் பிரசித்திபெற்ற பள்ளிவாசல்களில் கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல்களின் நிர்வாகம் மீது குற்றச்சாட்டுக்கள் ஊழல் காரணமாக இரு பள்ளிவாசல்களுக்கும் புதிதாக 22 பேர் கொண்ட நம்பிக்கையாளர் நியமனப் பத்திரத்தை 2024.07.24 அன்று முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (வக்கு பகுதி) வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கமைய புதிய நம்பிக்கையாளர் சபை குழுவினர் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளும் பொருட்டு ஊடக சந்திப்பின் ஊடாக பொதுமக்களுக்கு இன்று அறிவித்ததுடன் குறித்த பள்ளிவாசலுக்கு சென்று அங்கு பொதுமக்களை சந்தித்து தொழுகை மேற்கொண்டு புதிய நம்பிக்கையாளர் நியமனம் தொடர்பில் தெளிவாக விளக்கங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.( 05)

# தாய் சேய் நேய மருத்துவமனைகளை உருவாக்கி, மேம்படுத்தப் பயிற்சி




(வி.ரி. சகாதேவராஜா)

தாய் குழந்தை நேய மருத்துவமனைகளை உருவாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்வு சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் நடைபெற்றது .

இந் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு டாக்டர் கே.கிரிசுதன், தாய் சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் வைத்திய சாலை பணிப்பாளர்கள், அத்தியட்சகர்கள் வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் வளவாளராக கருத்துரைத்த பேராசிரியர் எம். திருக்குமார் -

கருத்தரித்து முதல் தடவையாக சிகிச்சை நிலையத்துக்கு வரும் போதே அவர்களுடன் நடந்து கொள்ளவேண்டிய முறை தொடர்பிலும். தாய் குழந்தை நேய வைத்திய சாலைகளில் தொடர்பாடலின் அவசியம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.( 05)

# பிரிஸ்பேர்னில் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கு நிகழ்வும்

ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் மாநகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) 15.30 முதல் 17.30 மணி வரை இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி ரதிதேவி கந்தசாமி வழங்குவார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடவுள்ளனர்.

இந்நிகழ்வின் தலைமையுரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றுவார். பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் ஆற்றுவார். ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெறும் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின்

ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பயனற்ற பயணம்

**யாழ்ப்பாணத்திற்கு வந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வு, போர்க் குற்றங்கள். நிலைமாறுகால நீதி ஆகியன தொடர்பில் எந்தக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. அதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்பார்ப்பு வேலைவாய்ப்புத்தான், தெற்கிலும் வடக்கிலும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளில் வித்தியாசம் இல்லை என்று தெரிவித்ததன் மூலம் பொருளாதாரத் தீர்வுகள்தான் நாட்டின் தேவையே தவிர அரசியல் தீர்வு அல்ல என்று குத்திக்காட்டவும் அவர் தவறவில்லை.**

**மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரம் என்கிற பழைய பல்லவியைக்கூட அவர் இந்தமுறை யாழ்ப்பாணத்தில் ஈனசுரத்தில்தான் முனங்கினார். காற்று மற்றும் சூரிய ஒளியின் மூலமான வலுச் சக்தி உற்பத்தி தொடர்பில் அவர் பேசினாலும் அவற்றை கொழும்பு அரசே தனது கட்டுப்பாட்டில் கொண்டிருப்பது குறித்தோ அல்லது அவற்றை மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் வழங்குவது குறித்தோ அவர் எதுவும் கூறவில்லை. வடக்கு கிழக்கில் கிடைக்கக்கூடிய இயற்கை வளம் என்பது காற்றும் சூரிய ஒளியும் மட்டும்தான். இங்கு நதி நீரோ, இயற்கை கனிய வளங்களோ கிடையாது. அப்படியிருந்தும் வடக்கு கிழக்கின் இயற்கை வளமான காற்றையும் சூரிய ஒளியையும் கொழும்பு சூறையாடிச் செல்லும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றித்தான் அவர் பேசுகின்றார். பின்னர் எப்படி வடக்கு கிழக்கு அபிவிருத்தியடைய முடியும்?**

**நீர்ப் பற்றாக்குறையுள்ள வடக்கில் விவசாய அபிவிருத்தி அதுவும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட விவசாயம் என்பது நீண்டகால நோக்கி சாத்தியமானது அல்ல. மேய்ச்சல் தரைகளோ போதிய நீர் வசதியோ இல்லாத வறண்ட வடக்கு நிலப்பரப்பில் கால்நடை வளர்ப்பும் பெரும் உற்பத்திகளுக்குச் சாத்தியமானது அல்ல. இருக்கும் வளங்களான காற்றையும் சூரியஒளியையும்கூட கொழும்பு அபகரித்துக்கொண்டு சென்றபின்னர் வருமானத்திற்கு வடக்கு மாகாண சபைகள் என்ன செய்வது? நிதித் தன்னிறைவைக் கொண்டிராத மாகாண சபைகளிற்கு உள்ளூரில் கிடைக்கக்கூடிய இத்தகைய நிதி ஆதாரங்களையும் தடுத்த பின்னர் அவற்றின் வளர்ச்சி அல்லது அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசுவதிலும் பயனில்லை. எனவே ரணில் விக்கிரமசிங்க கூறும் வடக்கு அபிவிருத்தி என்பதும் போலியான அதிகார அலகுகளை அடக்குமுறைக்குள்ளாக்கும் முயற்சியே தவிர வேறில்லை.**

**இத்தகைய நிலையில் தெளிவான பொருளாதார அபிவிருத்தியும் இன்றி அரசியல் தீர்வும் இன்றிய ஒரு திரிசங்கு சொர்க்கத்திற்குள் தனது அதிகாரக் கனவைத் தமிழர்களைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறார் ரணில். அவரால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் நிலைமாறு கால நீதி குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க முடியவில்லை என்றால், அவர் மீண்டும் பதவிக்கு வந்தாலும் அதனைச் செய்யமாட்டார். எனவே அவரது வடக்குப் பயணத்தால் இந்தமுறையும் எந்தப் பயனும் இல்லை.**

# பார்க்கின்சன் நோய்க்கு நவீன சிகிச்சை!



**கு.கணேசன்**

‘முதுமை என்பது இயற்கையின் வரம்’ என்கிறார் வில்லியம் ஷேக்ஸ்பியர். ‘முதுமை என்பது வாழ்க்கையின் பருவம் அல்ல, அனுபவத்தின் சின்னம்’ என்கிறார் ஓஷோ. ஆனால், இன்றைய வாழ்க்கை முறைகளில் முதுமை என்பது நோய்களுக்கான



கூடாரமாகவும் மாறிவருகிறது.

முதுமையில் எதிர்கொள்ளும் நோய்களில் ‘பார்க்கின்சன் நோய்’ (Parkinson's disease) பாதிப்பது இப்போது அதிகரித்திருக்கிறது. அழுத்தங்கள் நிறைந்த - உடற்பயிற்சிகள் குறைந்த - இன்றைய நவீன வாழ்வில் சிலருக்கு நடுத்தர வயதிலும் இது தொடங்கிவிடுகிறது. பெரும்பாலும் ஆண்களிடம்தான் இந்தப் பாதிப்பு அதிகம்.

### என்ன காரணம்?

பார்க்கின்சன் நோய் வருவதற்கான உண்மையான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மரபுப் பண்பும், தொழிற்சாலைக் கழிவுகளும், மாசுபட்ட சுற்றுச்சூழல் தரும் கேடுகளும் இணைந்து இந்த நோயை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. சில பூச்சிக்கொல்லிகளின் அதீத பயன்பாட்டுக்கும் இந்த நோய்க்கும் தொடர்பிருப்பது அறியப்பட்டுள்ளது. சிறுவயதிலிருந்தே அவ்வளவாகக் காய்கறிகளையோ பழங்களையோ உண்ணும் பழக்கம் இல்லாதவர்களுக்கு முதுமையில் இந்த நோய் வருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

சார்ஜ் குறைந்துபோன பேட்டரிபோல மூளை நரம்பணுக்களில் ‘டோப்பமின்’ (Dopamine) எனும் ரசாயனம் சுரப்பது குறைந்துவிடும்போது, உடலில் தசை இயக்கங்கள் பாதிக்கப்படும். அவற்றின் விளைவாக வருவதுதான் ‘பார்க்கின்சன் நோய்’. பெரும்பாலும் ‘டோப்பமின்’ சுரப்பு 80% குறைந்த பிறகே இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்படும்.

### அறிகுறிகள் என்னென்ன?

கைகளில் ஏற்படும் நடுக்கம்தான் பார்க்கின்சன் நோயை வெளிக்காட்டும் முக்கிய அறிகுறி. இந்த நோயாளிகள் ஆரம்பத்தில் உள்ளங்கைக்குள் ஏதோ ஒரு பொருளை வைத்துக்கொண்டு உருட்டிக்கொண்டு இருப்பதுபோல் செய்துகொண்டிருப்பார்கள். பிறகு கை விரல்கள் ஆடிக்கொண்டே இருக்கும். இந்த நடுக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் காலுக்கும் தலைக்கும் பரவும்.

விநோதம் என்னவென்றால், ஓய்வாக இருக்கும்போதுதான் இந்த நடுக்கம் ஏற்படும். ஏதாவது ஒரு வேலை செய்யத் தொடங்கிவிட்டால், நடுக்கம் நின்றுவிடும். உறக்கத்தில் நடுக்கம் இருக்காது. நடுக்கம் நாக்கையும் பாதிக்கும்போது பேச்சில் வேறுபாடு தெரியும். முணுமுணுப்பதுபோல் பேசுவார்கள். அந்தப் பேச்சு மற்றவர்களுக்குப் புரியவும் செய்யாது. கைகுலுக்குவதற்கும் கையெழுத்து போடுவதற்கும் சிரமப்பட வேண்டியிருக்கும்.

### வலிப்பு வருவது ஏன்?

அடுத்ததாக, தசைகள் இறுகிவிடும். உடலியக்கங்கள் குறையும். உதாரணமாக, ஓரிடத்தில் உட்கார்ந்தால், மணிக்கணக்கில் எந்தவித அசைவும் இல்லாமல் உட்கார்ந்திருப்பார்கள். நிற்க வைத்தாலும் நின்றுகொண்டே இருப்பார்கள். எழுந்து நிற்கும்போதும் நடக்கும்போதும் தள்ளாடுவார்கள். படுக்கையைவிட்டு எழும்போது சிறிய அளவில் மயக்கம் ஏற்படும். இதனால், அடிக்கடி விழுந்துவிடுவார்கள்.

செய்யும் வேலையைத் திடீரென்று பாதியில் நிறுத்திக்கொள்வார்கள். உண்ணும்போது, உடை உடுத்தும்போது, பொத்தான் மாட்டும்போது இம்மாதிரி நடக்கும். எப்போதும் எதையோ யோசித்துக்கொண்டிருப்பதுபோல் முகத்தில் எந்தவிதச் சலனமின்றி இருப்பார்கள். எதிலும் பற்றில்லாமல் இருப்பார்கள். எதிர்காலத்தை நினைத்து பயந்து மனச்சோர்வுக்கு உள்ளாவார்கள். மன அழுத்தம் அதிகரிக்கும்.

உணவை விழுங்குவதற்குச் சிரமப்படுவார்கள். சாப்பிடும் நேரம் நீளும். சாப்பிடும்போது இருமல் இடைஞ்சல் ஏற்படுத்தும். சாப்பிடும் உணவின் அளவும் குறையும். உடல் எடை குறையும். மலச்சிக்கல் ஏற்படும்.

கழிப்பறைபோவது, குளிப்பது, உடை உடுத்துவது, ‘ஏடிஎம்’ இயந்திரத்தில் பணம் எடுப்பது உள்ளிட்ட ஏற்கெனவே பழக்கப்பட்ட வேலைகளைக்கூடச் செய்யமுடியாமல் திணறுவார்கள். அடுத்தவர்களின் உதவியைத் தேடுவார்கள். ஞாபக மறதி கைகோக்கும். இரவில் காலை ஆட்டிக்கொண்டே இருப்பார்கள். கால்வலிக்கும். பாலுறவு பாதிக்கப்படும். சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். இரவில் அடிக்கடி சிறுநீர் போகத் தோன்றும். இதனால் உறக்கம் குறையும். பகலில் சோர்வாக இருப்பார்கள்.

### பரிசோதனைகள் என்னென்ன?

பார்க்கின்சன் நோயைக் கண்டறிய பரிசோதனைகள் இல்லை. இது வர வாய்ப்புண்டா என்பதைத் தெரிவிக்க ‘பயோமார்க்கர்கள்’ (Biomarkers) உண்டு. இவற்றை சில ரத்தப் பரிசோதனைகளில் அறியலாம். இளம் வயதினருக்கு மரபணு சார்ந்த பரிசோதனைகள் உள்ளன. என்றாலும், மருத்துவர்கள் முக்கியமாக நம்புவது மூளை எம்.ஆர்.ஐ. ஸ்கேன்/18 எஃப் டோப்பா ‘பெட்’ ஸ்கேன் பரிசோதனைகளை மட்டுமே. காரணம், இவர்களுக்கு ஏற்படும் உடல் நடுக்கத்துக்கு மூளையில் வேறு காரணங்கள் இருந்தாலும் இவற்றில் தெரிந்துவிடும்.

### சிகிச்சைகள் என்னென்ன?

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பார்க்கின்சன் நோய்க்கு நவீன சிகிச்சை!

4ம் பக்க தொடர்ச்சி..........



முதலில்ஒன்றைப்புரிந்துகொள்ளவேண்டும். பார்க்கின்சன் நோயைப் பொறுத்தவரை எல்லோருக்குமான பொதுவான சிகிச்சை பலன் தருவதில்லை. ஒருவருக்குப் பலன் தரும் சிகிச்சை அடுத்தவருக்குப் பலன் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அவரவர் உடல் தன்மை மற்றும் நோயின் தன்மையைப் பொறுத்தே சிகிச்சைக்குப் பலன் கிடைக்கும். இந்த நோயை முழுவதுமாகக் குணப்படுத்த முடியாது. இதை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால், அறிகுறிகளைக் கட்டுப்படுத்தலாம்.

பார்க்கின்சன் நோய்க்கு நரம்புநல சிறப்பு மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். அறிதிறன் நரம்புசார் மனநலப் பயிற்சியாளர் (Cognitive neuropsychologist), பேச்சுப் பயிற்சியாளர், இயன்முறைப் பயிற்சியாளர், உணவியலாளர் ஆகியோரின் உதவியும் தேவைப்படும்.

உடலில் தோன்றும் அறிகுறிகளின் அடிப்படையில் இந்த நோய் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்படும். முதல் நிலையில் உடலில் வலது பக்கம் அல்லது இடது பக்கம் மட்டும் கை நடுக்கம் இருக்கும். இரண்டாம் நிலையில் உடலில் இரண்டு பக்கங்களிலும் நடுக்கம் காணப்படும். அத்தோடு தசை இறுக்கமும் சேர்ந்துகொள்ளும். இவற்றுக்கு 'செலிகிலின்', (Selegiline) 'ராசாகிலின்' (Rasagiline) போன்ற நரம்பணுப் பாதுகாப்பு மாத்திரைகள் தரப்படும்.

நோயின் மூன்றாம் நிலையில், பாதிக்கப்பட்டவர் எழுந்து நிற்கவும் நடக்கவும் சிரமப்படுவார். உடலியக்கங்கள் குறைந்துவிடும். கை நடுக்கம் தீவிரமாகிவிடும். இதற்கு 'எல்-டோபா' (L-dopa), 'அமான்டடின்' (Amantadine) உள்ளிட்ட பலதரப்பட்ட மருந்துகள் உண்டு. மருத்துவரின் சரியான வழிகாட்டுதலுடன், தொடர்ந்து எடுத்துவர வேண்டும். மனச்சோர்வு, மலச்சிக்கல், உறக்கமின்மை போன்றவற்றுக்கும் சிகிச்சை தேவைப்படும்.

## கைகொடுக்கும் நவீன சிகிச்சை!

நோயின் நான்காம் நிலைதான் மோசமானது. கை நடுக்கம் எந்த மருந்துக்கும் கட்டுப்படாது. இந்த நோயாளிகள் எழுந்தால், நின்றால், நடந்தால், திரும்பினால் தள்ளாடித் தரையில் விழுந்துவிடுவார்கள். படுக்கையிலிருந்து அல்லது இருக்கையிலிருந்து இவர்களால் தனியாக எழுந்திருக்க முடியாது. அடுத்தவர்களின் உதவி தேவைப்படும். இவர்களுக்கு 'ஆழ்ந்த மூளைத் தூண்டல் சிகிச்சை' (Deep brain stimulation - DBS) எனும் நவீன சிகிச்சை பலன் தருகிறது.

பொதுவாக, ஒருவரிடம் குறைந்தது 5 வருடங்களுக்கு மருந்துகள் பலன் தருகின்றனவா என்று மருத்துவர்கள் கண்காணிப்பார்கள். அப்படிப் பலன் தராதவர்களுக்கு அல்லது மருந்துகளை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு, இந்த நவீன சிகிச்சையைப் பரிந்துரைப்பார்கள். இது எல்லோருக்குமான சிகிச்சை இல்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இது, இதயத்துடிப்புப் பிரச்சினைக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்படுவதைப் போல மூளைக்குப் பயன்படுத்தப்படும் நவீன சிகிச்சை. மூளைக்குள் மின்தூண்டல்களை ஏற்படுத்த ஒரு கருவி (Neurostimulator) இருக்கிறது. அது சிறிய தீப்பெட்டி அளவில் இருக்கும். இதிலிருந்து இரண்டு மின்வயர்கள் கிளம்பும். பேட்டரியில் இயங்கும்.

பயனாளியின் மேற்புற மார்பில் சிறிய அறுவை சிகிச்சை செய்து, இந்தக் கருவியைப் பொருத்துகிறார்கள். இதன் வயர்களைத் தோலுக்கு அடியில் காதுக்குப் பின்னால், தலைக்குப் போகச்செய்து, மூளைக்குள் செருகிவிடுகிறார்கள். கட்டுப்படுத்தும் கருவியைப் பயனாளியிடம் கொடுத்துவிடுகிறார்கள். தேவைப்படும்போது பயனாளி இதை இயக்கி கை நடுக்கம், நடை தள்ளாட்டம் போன்ற மிகையான உடலியக்கங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

மண்டையோட்டைப் பிளக்காமல் செய்யப்படும் இந்த நவீன சிகிச்சை இப்போது சென்னை, மதுரை, பெங்களூரு போன்ற பெருநகரங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மின் தூண்டல்களை மூளைக்கு அனுப்பி, அதன் மிகை இயக்கங்ளை குறைக்கும் இந்த சிகிச்சையால் மருந்துகளின் பயன்பாடு குறையும்; பயனாளியின் வாழ்க்கைத் தரம் உயரும். அதேநேரத்தில் ஏற்கனவே மோசமாகிவிட்ட மூளை அறிதிறன் சார்ந்த சீர்குலைவுகள் (Cognitive disorders) குறைய வாய்ப்பில்லை.

இதுஒருமுதுமைநோய்என்பதால், சலிக்காமல்செய்யப்படும் சிகிச்சைகளோடு, குடும்பத்தாரின் எரிச்சல்படாத வார்த்தைகள், நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள், பொறுமையான தொடர் கவனிப்பு, அன்பு, அரவணைப்பு ஆகியவையும் இணைய வேண்டியது முக்கியம்.

## எப்படித் தடுப்பது?

உணவுகள்: வெள்ளைச் சர்க்கரை, வெள்ளை உப்பு, வெள்ளை மைதா பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளுங்கள். நார்ச்சத்து மிகுந்த சிறுதானிய உணவுகளையும் புரதம் மிகுந்த உணவுகளையும் அதிகமாக உண்ணுங்கள். தினமும் ஒரு வண்ணமுள்ள காயும் பழமும் அவசியம். பழைய சோறு, நீராகாரம், 'புரோபயாட்டிக்' உணவு, நாட்டுக் காய்கள், மஞ்சள் கலந்த உணவு ஆகியவை நல்லவை. காய்கனிகளை நன்றாகக் கழுவிப் பயன்படுத்துங்கள். பச்சைக் காய்கறிகள் வேண்டாம். தினமும் 12 தம்ளர் வீதம் வெதுவெதுப்பான தண்ணீர் குடியுங்கள்.

உறக்கம்: தினமும் 6 - 8 மணி நேரம் உறக்கம் முக்கியம். உறங்கும் நேரத்தை முறைப்படுத்துங்கள். தொலைக்காட்சி மற்றும் கைப்பேசிப் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளுங்கள். மனச்சோர்வும் மன அழுத்தமும் கூடாது. அதற்குத் தனிமையை விரட்டுங்கள். பணி ஓய்வுபெற்றவர்கள் தங்களுக்குப் பிடித்த ஒரு வேலையில் அல்லது சமூக சேவையில் ஈடுபடுங்கள். குடும்ப உறவுகளுடன் உறவாடுங்கள். சமூகத்துடன் தொடர்புவைத்துக்கொள்ளுங்கள்.

உடற்பயிற்சிகள்: இளம் வயதிலிருந்தே தினமும் 45 நிமிடங்களுக்கு வேகமாக நடைப்பயிற்சி செய்வது நல்லது. கை, கால் தசைகளுக்கும் விரல் தசைகளுக்கும் தனிப்பயிற்சிகள் தரலாம். சைக்கிள் ஓட்டுதல், நீச்சல், திறந்தவெளி விளையாட்டுகள், உள்ளரங்க விளையாட்டுகள் போன்ற காற்றலைப் பயிற்சிகளும் 'பார்க்கின்சன் நோயை'த் தடுக்க உதவும் முக்கியப் பயிற்சிகள். வெளியில் செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே 'ட்ரட்மில்'லில் பயிற்சி செய்யலாம். தியானம் மனச்சோர்வுக்குத் திரைபோடும்.

மனப்பயிற்சிகள்: குறுக்கெழுத்துப் போட்டி, சுடோகு, வார்த்தை விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்ற பயிற்சிகளையும் செய்யலாம். புதிதாக ஓர் இசைக்கருவியைப் பழகிக்கொள்ளலாம். கதை சொல்லுதல், புதிய மொழியைக் கற்றுக்கொள்ளுதல் போன்றவை நினைவாற்றலை வளர்க்க உதவும். பார்க்கின்சன் நோயாளிகள் தங்கள் தொழில் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்வதும், தேவையைப் பொறுத்து பேச்சுப் பயிற்சிகள், அறிதிறன் நரம்புசார் மனநலப் பயிற்சிகள், இயன்முறைப் பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொள்வதும் அவசியம்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வ மதத் தலைவர்களால் விஜதாஸவுக்கு கௌரவிப்பு









சர்வமத தலைவர்களால் முன்னாள் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.


முன்னாள்நீதிஅமைச்சர்கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதையிட்டு தனது முதலாவது பிரசார கூட்டத்தை கொழும்பில் உள்ள சட்டமன்ற நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போதே சர்வமத தலைவர்களான டாக்டர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா,கலஹமே தம்மரன்சி தேரர், மௌலவி முசாமில், அருட்தந்தை சுரேன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(05)

# கோழைத்தனமான தாக்குதல்களால் ஒருபோதும் பலஸ்தீன விடுதலை பாதையை முடக்க முடியாது

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் கண்டனம்





தமது மண்ணுக்கான உரிமை மீட்பு போராட்டத்தில் நிலைத்துநின்றபாலஸ்தீனத்தின்ஹமாஸ்அரசமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலைசம்பவம் மிலேச்சனத்தின் வெறியர்களின் முகங்களை காட்டுகின்றது. இப் படுகொலைகளை மனிதத்துவம் கொண்ட எவராலும் அங்கீகரிக்க முடியாது.

ஆக்கிரமிப்பை மட்டும் கொண்டு ஹமாஸ் மக்களையும், சிறுவர்களையும், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியோர்கள் என பாராது கொடூரமான முறையில்கொன்றொழிக்கும் இஸ்ரேலின் இந்த செயலை நான் பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸானது வண்மையாக கண்டிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை-பலஸ்தீனஉறவுஎன்பதுபலஆண்டுகள் நெருக்கமானது,இந்தஉறவானதுஎம்மில்இருந்துபிரிக்க முடியாததொன்று என்பதால் தான் நாம் இழப்புக்களின் வேதனையை உணர்கின்றோம். பாலஸ்தீனத்தின் போராட்டம் என்பதுஉலகலாவிய வல்லரசுகள் கூட நியாயம் கண்டுள்ள நிலையில்இஇஸ்ரேல் தொடர்ந்து கட்டுக்கடங்காதுஇ இ காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அம்மக்களை மேலும் பல இழப்புக்களுக்குள் தள்ளிவருகின்றது.

அப்பட்டமான மனிதஉரிமை மீறல்களாக இந்த படுகொலை காணப்படுவதாகவும்இ எல்லை மீறும் இஸ்ரேலின் இந்தமோசமான மனித படுகொலையினை நிறுத்த உலக நாடுகள் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டுவதுடன்இ இஸ்ரேலின் இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் அமைப்பின் தலைவர் மர்ஹூம் இஸ்மாயில் ஹனியாவின் மறைவுக்கு எமது கட்சி ஆழ்ந்த கவலையினை வெளிப்படுத்துகின்றதுஇஅதே போல் சஹீதுடைய அந்தஸ்தினை எல்லாம் வல்ல அல்லாஹூத்தாஆலா அவருக்கு வழங்க பிரார்த்தனை செய்கின்றேன். - என்றார்.( 05)



## அந்நூர் அகடமியில் குருதிக்கொடை முகாம்





(எச்.எம்.எம்.பர்ஸான்)

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் ஹிஜ்ரா நகர் - நாவலடி அந்நூர் அகடமி கல்வி நிறுவனத்தில் இரத்ததானமுகாம்வியாழக்கிழமை இடம்பெற்றது.

அக்கடமி கல்வி நிறுவனத்தின் அதிபர் ஏ.ஹபீப் காஸிமி தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் ஆர்வத்துடன் பலரும் வருகை தந்து இரத்ததானம் செய்தனர்.( 05)

## இலங்கை வங்கியின் 85ஆவது ஆண்டு விழா

(பி.கேதீஸ்)

இலங்கை வங்கி தனது 85 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தலவாக்கலைகிளையின்முகாமையாளர் எம்.ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது சர்வ மத பிரார்த்தனைகள் நடைபெற்று கேக்வெட்டிகொண்டாடப்பட்டதுடன் தலவாக்கலைபிரதேசத்தில்புலமைப் பரிசில் பரீட்சையில் அண்மையில் சித்திபெற்றமாணவமாணவிகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் இலங்கைவங்கி கிளையின் நுவரெலியா பிரதேச முகாமையாளர் பி.விஸ்வநாதன், இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் முகாமையாளர் எம்.ராமன், தலவாக்கலை பிரதேச செயலாளர் சுபாஷினி பிரேமசிங்க, இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (05)

## கண்டாவளையில் யானை அட்டகாசம்



கண்டாவளைபிரதேசசெயலாளர் பிரிவுக்குஉட்பட்டதர்மபுரம்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு ஒரு மணியளவில் தருமபுரம் மக்கள் குடியிருப்புகள் பகுதியில் புகுந்த காட்டு யானை ஒன்று வாழ்வாதாரத்திற்காக செய்கை மேற்கொள்ளப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட வாழை 1/4 சோழச் செய்கை மற்றும் பலன் தரக்கூடிய நிலையிலிருந்த பலாமரத்தின் பலா காய்கள் தென்னை ஒன்றும் முற்று முழுதாகசேதமாக்கிஉள்ளதாகவீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேலும் தெரிவிக்கையில் -

தொடர்ந்தும் தமது பகுதிக்கு யானை வரலாம் என அச்சத்தில் இருப்பதாகவும்தமதுபாதுகாப்பிற்காக யானை வெடியை தந்ததுமாறு வேண்டியுள்ளார். (05-113)



காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் சமூகத்தின் சமகால அரசியல் வகிபாக தெளிவூட்டல்

## கல்முனையில் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகத்தின் சமகால அரசியல் வகிபாகம் மற்றும் கல்முனையின் எதிர்கால நகர்வுகள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டும் பொதுக்கூட்டம் ஒன்றுகடந்தவியாழக்கிழமை கல்முனை கடற்கரைப் பள்ளி முன்பாக இடம்பெற்றது.



இக்கூட்டத்திற்கு பிரதான பேச்சாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமானசட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்டு தேசிய அரசியலில் முஸ்லிங்களின் வகிபாகம், ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு, கல்முனை அரசியலில் இடம்பெறும்சதித்திட்டங்கள், அபிவிருத்தித்திட்டங்களின் அடைவுகள், கிழக்கு மாகாண முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கடந்த அரசாங்கத்தில் முஸ்லிங்கள் சந்தித்த சவால்கள், ஜனாஸா எரிப்பின் மூலம் சந்தித்த சவால்கள், கல்முனை முஹையத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் புதிய நம்பிக்கையாளர் நியமனம் என பல்வேறு பட்ட முக்கிய விடயங்களை உணர்வுபூர்வமாக உரையாற்றினார்.

மேலும், இக்கூட்டத்தில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோரும் உரையாற்றியதுடன் கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதிமேயர் ஏ.ஏ. பஷீர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மத்தியகுழு உறுப்பினர்கள் மற்றும்ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ்கட்சியின்முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(05)



# புளியம் பொக்களை நாகதம்பிரான் ஆலயத் திருவிழா இன்றுடன் நிறைவு

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற தலங்களில் ஒன்றான கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய கொடியேற்ற மகோத்சவம் 24 .07.2024 சிறப்புற கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று ரத உற்சவமும் இன்று தீர்த்த உற்சவமும் சிறப்புற நடைபெறும் இன்று ஆடி அமாவாசை பிதிர்க்கடன் பூஜைவழிபாடுகளும்நடைபெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (05-113)

# வசதி குறைந்த மாணவருக்கு கற்றலுக்கான உதவி வழங்கல்



(வி.ரி .சகாதேவராஜா)

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம்(ஒஸ்கார்) காரைதீவில் வசதி குறைந்தமாணவர்களுக்குஒருதொகுதி பாதணிகளையும் சீருடைகளையும் புலமைப்பரிசில் 14 வருட கால வினா விடை நூலையும் வழங்கி வைத்தது.

இந்நிகழ்வு விக்னேஸ்வரா வித்யாலயத்திலும், காரைதீவு விஷ்ணு வித்தியாலயத்திலும் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விக்னேஸ்வரா வித்தியாலய நிகழ்வு அதிபர் எஸ். சிவயோகராஜா தலைமையிலும், விஷ்ணு வித்யாலய நிகழ்வு அதிபர் எஸ். ரவீந்திரன் தலைமையிலும் நடைபெற்றது .

இந்த இரு நிகழ்வுகளுக்கும்ஒஸ்கார் அமைப்பின்வேண்டுகோளுக்கு இணங்க உதவிக் கல்விப்பணிப் பாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதமவி ருந்தினராகக் கலந்துகொண்டு வழங்கி வைத்தார்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர் கே. லோகநாதன், உ. சஜானந்த் ஆகியோர் ஏற்பாடுகளை செய்து கலந்துகொண்டனர்.

நிகழ்வில்ஆசிரியர்கள்மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதனை ஒஸ்கார் அமைப்பின் சமூக சேவைக்கான இணைப்பாளரும் முன்னாள் ஒஸ்கார் தலைவருமான வீரக்குட்டி விவேகானந்தராஜா ஆஸ்திரேலியாவிலிருந்து ஒழுங்கமைப்பு செய்து ஏற்பாடு செய்திருந்தார்.

ஒஸ்கார் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையிலான ஒஸ்கர் குழுவினர் இன்னோரன்ன பல சேவைகளை செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (05)



# உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வு

## திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடந்தது









(வி.ரி. சகாதேவராஜா)

உண்மைமற்றும்நல்லிணக்கபொறிமுறையின் இடைக்காலச்செயலகத்தின்செயலமர்வுதிருக்கோவில் பிரதேசசெயலாளர்தங்கையாகஜேந்திரன்தலைமையில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்ரஞ்சித்ஆரியரத்ன, டாக்டர்யூ.வி.தங்கராசா வஸ்னியா, கொத்தலாவல ஆகியோர் பிரதானிகளாக கலந்துசிறப்பித்தார்கள்.

மேலும் திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷாந்த் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதுபங்கேற்பாளர்கள்தங்கள்எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கசெயல்முறைதொடர்பாக பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர். (05)

# பஸ்– லொறி விபத்தில் 5 பேர் காயம்



(பி.கேதீஸ்)

தலவாக்கலை - நுவரெலியா பிரதானவீதியின்லிந்துலை,பாமஸ்டன் பகுதியில் வெள்ளிக்கிழமை காலை தனியார் சொகுசு பஸ் ஒன்றும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த நகரங்களுக்கு இடையிலான தனியார் சொகுசு பஸ் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ் ஒன்றின்சாரதிஉட்படநால்வர் காயமடைந்து லிந்துலை பிரதேசவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# வைத்தியர் அர்ச்சுனா மன்னாரில் கைதாகி விளக்கமறியலில் வைப்பு

மன்னார் வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை தொடர்ந்து வைத்தியர் அர்ச்சுனா நேற்று (சனிக்கிழமை) மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இரவு மன்னார் பொது வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியதாக மன்னார் வைத்தியசாலை நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டை தொடர்ந்து நேற்று காலை வைத்தியர் அர்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் மன்னார் தம்பன்னை குளத்தை சேர்ந்த இளம் தாய் ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிக்க வந்த நிலையில், வைத்திய செயற்பாட்டு வைத்தியர்கள் மற்றும் சுகாதர ஊழியர்களின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து வைத்தியர் அர்சுனா நேற்று கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரை 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(05)

# தேர்தல் சட்ட விதிமீறல்: 45 முறைப்பாடுகள் பதிவு

## பெப்ரல் அமைப்பு தகவல்

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் 45 முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை உள்ளடக்கியதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (05)

# வடக்கில் இருந்து ஜனாதிபதியை உருவாக்குவதே தனது இலக்காம்

## நாமல் கூறுகின்றார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வடக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை வென்றெடுப்பது எனது இலக்காக இருக்கின்றது, அவர் ஜனாதிபதி பதவிவரை செல்ல வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும் என்று மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலிஸ், காணி அதிகாரங்களை நாம் எதிர்ப்பதால்தான் வடக்கில் உள்ள சில கட்சிகளால் எங்களுடன் இணைந்து செயற்படமுடியாதுள்ளது. ஆனால் இன்றைய இளைஞர்கள் மத்தியில் மாற்றம் வந்துள்ளது எனவும் அவர் கூறினார். சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பகிரப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் நாம் கூறவில்லை. எமது கட்சியின் இந்த நிலைப்பாட்டால் வடக்கில் உள்ள சில கட்சிகளால் எம்முடன் இணைந்து செயற்படமுடியாத சூழ்நிலை உள்ளது.

ஆனால் கல்வி, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களில் நம்பிக்கைகொண்ட இளைஞர்கள் வடக்கில் உருவாகியுள்ளனர். நவீன உலகம் பற்றி அவர்கள் சிந்திக்கின்றனர். அவர்கள் எமது கட்சியுடன் நேரடியாக இணைகின்றனர். நாம் தெற்கில் உள்ள தேசிய அரசியல் கட்சி, மக்கள் அரசியலுக்கே முன்னுரிமை வழங்குகின்றோம். எம்மிடம் டீல் அரசியல் கிடையாது.

இன்னும் சில வருடங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வடக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாக வேண்டும் என்பது எனது இலக்காக இருக்கின்றது. அவர் அமைச்சரவைக்கு வருவார், ஒருநாள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளுக்குகூட செல்வார். இதற்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்கப் போவதில்லை. என்றார்.(05)

# போர்க் குற்றவாளிகளை பாதுகாத்த சுமந்திரன்

## பகிரங்கமாக குற்றஞ்சாட்டும் கஜேந்திரன்




2025ஆம்ஆண்டிலிருந்துஜெனீவா வரை சென்று பொறுப்புக்கூறலை முடக்கி சர்வதேச விசாரணை என்ற பெயரிலே யுத்த குற்றவாளிகளை பாதுகாத்துகாணாமல்ஆக்கப்பட்டோரின் வாழ்வு கண்ணீரோடு அலைவதற்கு சுமந்திரனுடைய செயல்பாடுகள் தான் காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் -

சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பசப்பு வார்த்தைகளை நம்பி தமிழ் மக்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவுகளும் பாரிய அழிவிலும் மீண்டும் ஒரு காணாமல் ஆக்கப்படும் யுகம் என்ற வாழ்க்கைக்குள்கொண்டுசெல்லப்படும்.

ஆகவே இவர்களுடைய கருத்தை புறக்கணித்து இந்த தேர்தலை முற்றாக புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, இவர்கள் அனைவருமே தமிழர்களின் வலிமைமிக்க சக்தியை தோற்கடிக்க சதிதிட்டம் தீட்டுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.(05)

# தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளர் எமது அரசியல் இருப்புக்கு தேவையா?

## வவுனியாவில் கலந்துரையாடல்





தமிழ் பொது வேட்பாளர் தமிழரின் அரசியல் இருப்புக்கு தேவையா என்பது தொடர்பாக வவுனியா பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களுடனான கலந்துரையாடல் நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியாவில்உள்ளவாடி வீட்டில் இடம்பெற்றது.

வவுனியா பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டிலான இந்த கலந்துரையாடலின் பின்னர், வவுனியா பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு பின்வருமாறு தெரிவித்தனர் -

பொது வேட்பாளர் தொடர்பாகஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பானது வவுனியாவில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களையும் அழைத்து அதன் ஊடாக ஒரு பொதுவேட்பாளர் தொடர்பாக அவர்கள் மேற்கொண்ட தீர்மாணங்கள்மற்றும்எண்ணக் கருக்கள் தொடர் பாகக் கலந்துரையாடலினை மேற்கொண்டு எமக்கு தெளிவுபடுத்தினால் நாங்கள் பொது வேட்பாளர் தொடர்பாக அடுத்த கட்ட நகர்வினை நோக்கி நகர்வதாக தீர்மானம் எடுத்துள்ளோம். - என்றனர். (05)

# தகாத உறவுகளினால் ஏற்படும் குடும்ப தகராறுகள் அதிகரிப்பு

தகாத உறவுகள் காரணமாக ஏற்படும் குடும்பத் தகராறுகள் அதிகரித்துள்ளன என இலங்கை பொலிஸ் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 111,709 குடும்பத் தகராறுகள் பதிவாகியுள்ள நிலையில் 2023 ஆம் ஆண்டில் 113,188 குடும்பத் தகராறுகள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில், தகாத உறவுகளினால் ஏற்படும் குடும்பத் தகராறுகள் கடந்த 2022 ஆம் ஆண்டில் 9,636 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 10,408 ஆகவும் அதிகரித்துள்ளன.

கணவர் அல்லது மனைவியால் ஏற்படும் துன்புறுத்தல்கள் , புறக்கணிப்புகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 22,584 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் காலி, கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் உளவியலாளர் ரூமி ரூபன் கருத்து தெரிவிக்கையில் -

கணவர் மனைவி இருவருக்கும் இடையில் புரிந்துணர்வின்மை , உடலுறவின்மை, அன்பின்மை மற்றும் குடும்பத் தகராறுகள் காரணமாகத் தகாத உறவுகள் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

(05)

## பொலிஸ் அறிவிப்பு

# பாலியல் துஸ்பிரயோகத்துக்குள்ளானால் ஆண்களும் முறைப்பாடளிக்க முடியுமாம்

பெண்களிடம் இருந்து ஆண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளானால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கமுடியும் என இலங்கை பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்ட திருத்தச் சட்டத்தின் 345 ஆவது பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச் செயல் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஆண் , பெண் என்ற பாகுபாடு காட்டப்படவில்லை எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி ஓர் ஆணோ அல்லது ஆண் சிறுவனோ ஏதேனும் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளானால், அவர் தயக்கமின்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம்.

சமூகத்தில் பதிவாகும் சம்பவங்களை அவதானிக்கும் போது, பொலிஸ் நிலையங்களில் வயது முதிர்ந்த பெண்களால் ஆண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். ஏ-9 வீதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கோர விபத்து







யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் முந்திச் செல்ல முயன்ற ஹயஸ் வாகனத்தால் மூன்று வாகனங்கள் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

மேற்படி விபத்து நேற்று (சனிக்கிழமை) காலை 7.45 மணியளவில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ் ஹயஸ் வாகனம், டிப்பர் என்பன முறையே தொடர்ச்சியாக பயணித்துள்ளன.

ஒரு கட்டத்தில் ஹயஸ் வாகன சாரதி பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த வாகனத்தால் சடுதியாக ஹயஸ் வாகனத்தை திருப்ப முற்பட்ட போது பஸ் பின்பகுதியுடன் ஹயஸ் வாகனம் மோதியது.

ஹயஸ் வாகனத்துக்கு பின்னால் வந்த டிப்பரும் ஹயஸ் வாகனத்தின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து காரணமாக ஹயஸ் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன், பஸ்ஸின் பின்பகுதி, டிப்பரின் முன்பகுதி என்பன சிறியளவில் சேதமடைந்துள்ளன.

விபத்தின் போது ஒருவருக்கும் உயிர் சேதம் ஏற்படாத நிலையில் ஹயஸ் வாகனத்தின் சாரதி காயமடைந்தார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

# நாடாளுமன்றருகே விபத்து : நான்கு இளைஞர்கள் காயம்



நாடாளுமன்றத்திற்கு அருகில் நேற்று(சனிக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் நான்கு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்துடன் பயணித்த கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, நான்கு இளைஞர்கள் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் குருணாகலில் ஒருவர் கைது

குருணாகல், நிக்கவெரட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பலல்ல பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேகநபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என நிக்கவெரட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நிக்கவெரட்டிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருணாகல், நிக்கவெரட்டிய பகுதியில் வசிக்கும் 63 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

# மகளை மோதிவிட்டு தப்பிச்சென்ற லொறியைத் துரத்திய தந்தை சாவு

பலாங்கொடை நகரில் மோட்டார் சைக்கிளை மோதி 7 வயது சிறுமியை காயப்படுத்திவிட்டு தப்பிச்சென்ற லொறியை துரத்தி சென்ற தந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

பலாங்கொடை பகுதியில், இந்த லொறி சாரதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதி ஏழுவயது சிறுமி ஒருவரை காயப்படுத்திவிட்டு லொறியை நிறுத்தாமல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

பின்னர், சிறுமியின் 32 வயதுடைய தந்தை மோட்டார் சைக்கிளில் லொறியை துரத்திச் சென்று லொறியின் கதவில் ஏறி சாரதியை கீழே இறக்க முற்பட்ட வேளை, தந்தை விபத்திற்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது , அந்த பகுதியில் அருகில் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்ததில் லொறியின் சாரதி அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, லொறியின் சாரதி நேற்று (சனிக்கிழமை) பலாங்கொடை பதில் நீதவான் நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். (05)

# புத்தல – கதிர்காமம் வீதியில் சிறுத்தை நடமாட்டம் அதிகரிப்பு

## பிரதேசவாசிகள் அச்சம்



புத்தல - கதிர்காமம் வீதியில் கடந்த சில நாள்களாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பிரதேசவாசிகள் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சிறுத்தைகள் பெரும்பாலும் பிற்பகல் மற்றும் இரவு வேளைகளில் வீதியில் நடமாடுகின்றன.

எனவே, புத்தல - கதிர்காமம் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் மிகவும் அவதானத் துடன் செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை காரணமாகவும் உணவு தேவைக்காகவும் இந்த சிறுத்தைகள் இவ்வாறு வீதியில் நடமாடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# குப்பைகளை உட்கொண்டு உடல்நலக் குறைவால் பறக்க முடியாது தவிக்கும் அரிய வகைப் பறவை



ஹிக்கடுவை கடற்கரையில் உடல் நிலை பாதிக்கப்பட்ட அரிய வகை வலசை பறவையொன்று வனவிலங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அத்திடிய பறவைகள் சரணாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த பறவை குறித்து ஹிக்கடுவை தேசிய பூங்காவின் பாதுகாவலர் அசங்க குணவர்தன தெரிவித்துள்ளவை வருமாறு -

இந்த பறவை கிழக்கு ஆபிரிக்கா மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கு மேற்கே உள்ள வெப்பமண்டலப் பகுதிகளை பூர்வீகமாகக் கொண்ட ஷீர்வொட்டர் பறவை இனமாகும்.

வெப்பமண்டலப் பறவை மனித வாழ்விடங்களிலிருந்து விலகி வாழ்வதோடு, பாறைப் பிளவுகள் அல்லது மணல் மேடு குழிகளில் முட்டையிடும்.

இந்த பறவையினம் குஞ்சு பொரித்த பிறகு, குஞ்சுகள் பறக்கும் வரை நீண்ட காலத்துக்கு அவற்றை பாதுகாக்கும்.

நீண்டதூரம் பறக்கும் திறன் கொண்ட ஷீர்வொட்டர் பறவைகள் கடலில் மிதக்கும் பொலித்தீன் அல்லது பிளாஸ்டிக் குப்பைகளை உட்கொள்வதால் நோய்வாய்ப்படுகின்றன.

ஹிக்கடுவை கடற்கரையில் காணப்பட்ட இந்த பறவையும் பிளாஸ்டிக், பொலித்தீன் குப்பைகளை உட்கொண்டதால் உடல்நலக் குறைவு ஏற்பட்டு பறக்க முடியாமல் இருந்தது.

தென் பகுதியில் ஷீர்வொட்டர் தென்பட்டது இதுவே முதல் தடவை எனத் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2024இல் வெளியிடப்பெற்றது